<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025ம் ஆண்டு ஜீலை திங்கள் 01ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 02/2025</u>**

**<u>அசல் வழக்கு எண். 57/2021</u>**

மாரியப்பன் (எ) மாரிக்கண்ணு ..... வாதி

... எதிர் ...

1. மாவட்ட ஆட்சி தலைவர் புதுக்கோட்டை.
2. வருவாய் கோட்டாச்சியர், இலுப்பூர்.
3. வருவாய் வட்டாச்சியர், இலுப்பூர்.
4. வெள்ளைச்சாமி
5. மணி ..... பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக கடந்த 02.07.2025-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு A.ரபீக், அவர்கள் முன்னிலையாகியும், வாதி கற்றறிந்த வழக்குரைஞர் திரு M.சுரேஷ், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனு சொத்தை பார்வையிட்டு பூஸ்துதி இயற்கை அமைப்புடன் கூடிய அறிக்கையையும் மற்றும் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் கிராம கணக்குகள் அடிப்படையில் வழக்கு சொத்தான பட்டா எண் 728, புல எண். 144/127ஐ அளவீடு செய்து வரைபடம் மற்றும்

அறிக்கை ஒன்றை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

தான் இந்த வழக்கில் வாதி ஆவேன் என்றும், தான் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை, செலவுத் தொனை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், மேற்படி வழக்குரை, இடைக்கால தடையாணை மனுவையும் இந்த பிரமாயத்திரம் இம்மனுவின் ஒரு அங்கமாக பாவித்து கொள்ளுமாறு வேண்டுகிறேன் என்றும், இந்த வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர் என்றுர், தாவாச் சொத்தானது தமிழ்நாடு அரசல் பட்ட எண். 728ல் காணும் நத்தம் புல எண் 144/127 என்ற நம்பரில் வாதி பெயருக்கு பட்டா கொடக்கப்பட்டு அது முதுல் வாதியால் தாவாச் சொத்தின் சுவாதீனம் அடைந்து அதில் வாதியால் வீடு கட்டி அனுபவிக்கப்பட்டு வரும் சொத்தாகும் என்றும், தாவாச் சொத்திற்கு தமிழ்நாடு அரால் பராமரிக்கப்பட்டு வரும் வருவாய்துறை ஆவணங்களாக அடங்கல், சிட்டா ஆகியவற்றில் வாதியின் பெயரில் பதிவாகியுள்ளது என்றும், மேலும் தாவா சொத்தில் வாதி வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வந்ததற்கு வாதி பெயருக்கு வீட்டு வரி விதிக்கப்பட்டு வீட்டுவரியும் நாளது தேதி வரை செலுத்தி வருகிறார் என்றும், இந்நிலையில் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தடை, தகராறு செய்ய முற்பட்டதால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை பிரதிவாதி தரப்பில் PW 2 விசாரணை செய்யும் போது வாதியின் இடத்தில் அனுமன் கோவில் உள்ளதா என்றும் விசாரணை செய்யப்பட்டது என்றும், வாதி சாட்சியம் விசாரணை செய்யப்பட்டது தாவா சொத்தில் கோவில் எதுவும் கட்டப்படவில்ல என்று வாிதி தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டது என்றும், கோவிலுக்கம் வாதியின்

இடத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தால் தான் தாவா சொத்தில் கோவில் இருக்கிறதா இல்லையா என்பதை நிரூபணம் செய்ய இயலும் என்றும், இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து வழக்கு சொத்தான பட்டா எண். 728, புல எண் 144/127யும் வாதியின் ஆவணங்கள் மற்றும் கிராம கணக்குள் அடிப்படையில், சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் சர்வே எண்ணை ஒப்பு நோக்கி அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு பிரார்த்திக்கப்படுகிறது என்றும், இந்த வழக்கு நிரந்தர தடையாணை பரிகாரத்திற்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்த போதிலும், நீதிமன்ற ஆணையர் அளசீடு செய்து வரைபடம் தாக்ல் செய்தால் உடனடியாக வழக்கு முடிவுக்கு வருவதற்கும், நீதிமன்றம் உண்மையை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கம் என்றும், இந்த ஆணையர் நியமனம் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்விதமான இழப்போ துயரமோ ஏற்படாது என்றும், எனவே வழக்குரை பட்டா எண் 728, புல எண் 144/127ஐ சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் கிராம வருவாய் கணக்குகளுடன் ஒப்பிட்டு அளந்து மாதிரி வரைபடம், அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு பிசகு, மோசடி சட்டப்படி நிலைநிற்கதல்ல என்றும், இதில் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவர் ஆவார் என்றும், வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையுடையதாகும் என்றும், பிரமாணப்பத்திரிக்கை பாரா 2ல் தாவா

சொத்தானது தமிழ்நாடு அரசால் பட்டா எண்.728ல் காணும் நத்தம் புல எண். 144/127 என்ற நம்பரில் வாதி பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டு அது முதல் வாதியால் தாவாச் சொத்தின் சுவாதீனம் அடைந்து அதில் வாதியால் வீடு கட்டி அனுபவிக்கப்பட்டு வரும் சொத்தாகும் என்று சொல்லியுள்ளது பொய்யாகும் என்றும், தாவாச் சொத்திற்கு தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்பட்டு வரும் வருவாய்த்துறை ஆவணங்களான அடங்கல், சிட்டா ஆகியவற்றில் வாதியின் பெயர் பதிவாகியுள்ளது என்றும், மேலும் தாவாச் சொத்தில் வாதி வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வந்ததற்கு வாதி பெயருக்கு வீட்டு வரி விதிக்கப்பட்டு வீட்டு வரியும் நாளது தேதி வரை செலுத்தி வருகிறார் என்று சொல்லியுள்ளதையும் வாதியே நிருபிக்க கடமைபட்டவர் ஆவார் என்றும், இந்நிலையில் 4 மற்றம் 5 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தடை, தகராறு செய்ய முற்பட்டதால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளதும் மனுவின் தோதிற்காக சொல்லப்பட்டுள்ளதே தவிர அதில் எள்ளவும் உண்மையில்லை என்றும், மேலும் மேற்படி வாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை பிரதிவாதி தரப்பில் அ.சா 2 ஐ விசாரணை செய்யும் போது வாதியின் இடத்தில் அனுமன் கோவில் உள்ளதா என்றும், விசாரணை செய்யப்பட்டது என்றும், வாதி விசாரணை செய்யப்பட்ட போது தாவா சொத்தில் கோவில் எதுவும் கட்டப்படவில்லை என்று வாதி தர்பில் சாட்சியம் அளிக்கப்பட்டது என்று சொல்லியுள்ளதும் பொய்யாகும் என்றும், கோவிலுக்கம், வாதியின் இடத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தால் தான் தாவா சொத்தில் கோவில் இருக்கிறதா இல்லையா என்பதை நிரூபணம் செய்ய இயலும் என்று மனுவின் தோதிற்காக சொல்லப்பட்டுள்ளதே தவிர அதில் எவ்வித சட்ட முகாந்திரமும் இல்லை என்றும், இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து வழக்கு சொத்தான பட்டா எண்.728, புல எண்.144/127ம் வாதியின் ஆவணங்கள் மற்றும் கிராம கணக்குகள்

அடிப்படையில், சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் சர்வே எண்ணை ஒப்பு நோக்கி அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்றும், இந்த வழக்கு நிரந்தர தடையாணை பரிகாரத்திற்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்த போதிலும், நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து வரைபடம் தாக்கல் செய்தால் உடனடியாக வழக்கு முடிவுக்கு வருவதற்கு நீதிமன்றம் உண்மையை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்று சொல்லியுள்ளதும் சட்டப்படி தவறானதாகும் என்றம், அது எற்புடைய காரணங்கள் இல்லை என்றும், அந்த அடிப்படையிலும் மனு தள்ளுபடிக்கு அருகதையுடையதாகும் என்றும், மனுதார் நீதிமன்ற ஆணையர் நியமன மனு கோரியுள்ளதற்கு உள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல என்றும், மேலும் நிரந்தர தடையாணை பரிகாரம் மட்டும் கோரும் வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கேட்க முடியாது என்ற பல உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் இருப்பது இந்நீதிமன்றம் அறிந்ததே என்றும், மேலும் மனுதாரர் தன்னுடைய பிராணப்பத்திரிக்கையில் அ.சா 2 ஐ விசாரணை செய்யும் போது வாதியின் இடத்தில் அனுமன் கோவில் எதுவும் கட்டப்படவில்லை என்று வாதி தரப்பில் சாட்சியம் அளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் அவ்வாறு வாதியால் சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பது வாதியினுடைய விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையை படித்து பார்த்தலே தெரிய வரும் என்றும், மேலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவதை தாவா சொத்தில் கோவில் உள்ளதா இல்லையா என்பதை நிருபணம் செய்வதற்காகத்தான் தாவாச் சொத்தில் கோவில் உள்ளது என்பதை மனுதாரர் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்த பிறகு அது சம்பந்தமாக மீண்டும் ஒரு நிரூபணம் தேவையில்லை என்பது நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றும், மனுதாரர் அ.சா 1 தனது 20.04.2024ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு தான் அனுமன் கோவில் தாவா இடத்தில் கட்டப்பட்டது என்றும், மேற்படி

அனுமன் கோவிலை மாராயப்பட்டி கிராம ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து கட்டினார்கள் என்றும், மேலும் 11.09.2023ம் தேதியில் குறுக்கு விசாரணை பாரா 8ல் தாவா சொத்தில் ஆஞ்சனேயர் கோவில் கட்டப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆக தாவா சொத்தில் கோவில் உள்ளது என்பது மனுதாரரால் ஒப்புக்கொண்ட பிறகு அதனை நிருபணம் செய்ய இந்நீதிமன்ற நியமன மனு தேவையற்ற ஒன்றாகும் என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**<u>3. பிரச்சனைக்கான தீர்வு</u>**

1) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/வாதி தரப்பு இம்மனுவானது மனு சொத்தை பார்வையிட்டு பூஸ்துதி இயற்கை அமைப்புடன் கூடிய அறிக்கையும் மற்றும் சர்வேயர் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் கிராம கணக்குகள் அடிப்படையில் வழக்கு சொத்தான பட்டா எண் 728, புல எண். 144/127ஐ அளவீடு செய்து வரைபடம் மற்றும் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேலும் மனுதாரர்/வாதி தன் மனுவில், மனுதாரர்/ வாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கு வா.சா 2ஐ விசாரணை செய்யும் போது மனுதாரர்/வாதியின் இடத்தில் அனுமன் கோவில் உள்ளதா என்று விசாரணை செய்யப்பட்டது என்றும், தாவா சொத்தில் கோவில் எதுவும் கட்டப்படவில்லை என்று மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டது என்றும், கோவிலுக்கும் மனுதாரர்/வாதியின் இடத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் அளிவீடு

செய்தால் தான் தாவா சொத்தில் கோவில் இருக்கிறதா இல்லையா என்பதை நிருபணம் செய்ய இயலும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3) இந்நிலையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையர் நியமன மனு கோரியுள்ளதற்கு உள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல என்றும், மேலும் நிரந்தர தடையாணை பரிகாரம் மட்டும் கோரும் வழக்குகளில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கேட்க முடியாது என்றும், மேலும் மனுதாரர்/வாதி தன்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் வா.சா 2ஐ விசாரணை செய்யும் போது மனுதார்/வாதியின் இடத்தில் அனுமன் கோவில் எதுவும் கட்டப்படவில்லை என்று மனுதார்/வாதி தரப்பில் சாட்சியம் அளித்ததாக கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் அவ்வாறு மனுதார்/வாதியால் சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பது மனுதார்/வாதியினுடைய விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையை படித்து பார்த்தலே தெரிய வரும் என்றும், மேலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோருவதை தாவா சொத்தில் கோவில் உள்ளதா இல்லையா என்பதை நிருபணம் செய்வதற்காகத்தான் தாவாச் சொத்தில் கோவில் உள்ளது என்பதை மனுதாரர் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்த பிறகு அது சம்பந்தமாக மீண்டும் ஒரு நிரூபணம் தேவையில்லை என்றும், மனுதாரர்/வாதி அ.சா 1 தனது 20.04.2024ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு தான் அனுமன் கோவில் தாவா இடத்தில் கட்டப்பட்டது என்றும், மேற்படி அனுமன் கோவிலை மாராயப்பட்டி கிராம ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து கட்டினார்கள் என்றும், மேலும் 11.09.2023ம் தேதியில் குறுக்கு விசாரணை பாரா 8ல் தாவா சொத்தில் ஆஞ்சனேயர் கோவில் கட்டப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆக தாவா சொத்தில் கோவில் உள்ளது என்பது மனுதார்/வாதியால் ஒப்புக்கொண்ட பிறகு அதனை நிருபணம் செய்ய இந்நீதிமன்ற நியமன மனு தேவையற்ற ஒன்றாகும் என்றும்

எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

4) இதனைக் குறித்து பரிசீலனை செய்தததில், மனுதார்/வாதியின் இம்மனு தாவா சொத்தில் கோவில் உள்ளதா இல்லை என்பதை நிருபணம் செய்வதற்காக ஆணையர் நியமிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எடுத்துரைத்துள்ளது போல் வா.சா 1 தனது குறுக்கு விசாரணையில் இதனைக் குறித்து ஒப்புக்கொண்டு பின்வருமாறு சாட்சியம் அளித்திருப்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொள்கிறது. **"உங்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சொத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது அனுமர் கோவில் ஒன்று அந்த இடத்தில் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு அனுமர் கோவில் கட்டப்பட்டது. மேற்படி அனுமர் கோவில் மாராயப்பட்டி கிராம ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து கட்டினார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு அனுமர் கோவில் கட்டப்பட்ட விவரத்தை நீங்கள் நீதமன்றத்திற்கு முறைப்படி தெரியபடுத்தினீர்களா என்றால், இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா 1 ன் சாட்சியத்தின் படி மனு சொத்தில் மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்படும் அனுமர் கோவில் உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

5) மேலும் வா.சா 2 தனது குறுக்கு விசாரணையில், அனுமர் கோவில் இல்லை என மறுத்துரைத்து சாட்சியம் அளித்துள்ள போதிலும், மேற்படி மனுதாரர்/வாதியான வா.சா.1ஆல் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி குறித்து நிருபிக்கும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சாட்சியங்களை சேகரிப்பதற்காக ஆணையரை நியமிக்க இயலாது என்பதும் பிரச்சனைக்குரிற உண்மைகளை தெளிவுபடுத்த மட்டும் ஆணையரை நியமனம் செய்யலாம் என்பதும் சட்டவிதியாக உள்ள நிலையில், இவ்வழக்கின் பிரச்சனைகுரிய

பொருண்மை மனுதாரர் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளரா இல்லையா என்பது மட்டுமே ஆகும் என்பதாலும், மேலும் மேற்படி சங்கதியை வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலமாக நிருபிக்க இயலும் என்பதாலும், மனுதாரர் தரப்பு இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஜீலை திங்கள் 02–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/சாதத்துணிஷா

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

ஒம்/சாதத்துணிஷா
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.